# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERAMBALUR.

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | C.C.No.236/2017 |
| preliminary Register | : | |
| Sessions | : | |
| DEPOSITION OF WITNESS for | Prosecution<br>Defence<br>Court | அ.சா.2 |
| Name : | | **சையது கமால் பாட்ஷா, மண்டல இணைப்பதிவாளர் கூட்டுறவு சார்பதிவாளர் (ஓய்வு)** |
| Father's/Husband Name: | | அல்லா பாட்ஷா |
| Village : | | ரெங்கம்மாள் நகர், துறைமங்கலம் |
| Taluk : | | பெரம்பலூர் |
| Age : | | 68/2019 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 25.07.2019

முதல் விசாரணை

நான் பெரம்பலூர் மாவட்ட இணைப்பதிவாளர் அலுவலகத்தில் கூட்டுறவு சார்பதிவாளராக பணி செய்து தற்போது ஓய்வு பெற்று துறைமங்கலத்தில் வசித்து வருகிறேன். அப்போது பி.ஆர்.2 பெரம்பலூர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையின் தனி அலுவலர் (கூடுதல் பொறுப்பு) 01.12.2006 ஆம் தேதி முதல் நியமனம் செய்யப்பட்டேன். எனக்கு முன்னால் கு.ராஜகோபால் என்பவர் கூட்டுறவு சார்பதிவாளர் தனி அலுவலராக பணி செய்து வந்தார். அச்சமயம் இப்பண்டக சாலையில் 2006 தீபாவளி பண்டிகையை முன்னிட்டு இனிப்பு பண்டங்கள் தயாரித்து அதனை பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து நியாய விலை கடைகளுக்கும் விற்பனை செய்யும் வகையில் தயார் செய்யப்பட்டிருந்தது. நான் தனி அலுவலராக பொறுப்பேற்றுக் கொண்டு அவ்வாறு விநியோகம் செய்யப்பட்ட பொருட்களில் சுமார் ரூ.3 லட்சம் அளவிற்கு கெட்டு போன பொருட்கள் அங்காடிகளில் இருந்ததை அறிந்தேன். இது தொடர்பாக பண்டக சாலையின் கட்டுப்பாட்டில் உள்ள பெரம்பலூர், அரியலூர் மற்றும் ஜெயங்கொண்டம் அங்காடிகளில் நேரடியாக பார்வையிட்டு கெட்டுபோன இனிப்பு பண்டங்களை உறுதி செய்தேன். இதனை அடுத்து பெரம்பலூர் சரக துணை பதிவாளர் அவர்களுக்கு 25.05.2007 ஆம் தேதி அறிக்கை சமர்ப்பித்தேன். இந்த வழக்கு சம்மந்தமாக தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம் 1983 பிரிவ 82—ன் கீழ் நியமனம் செய்யப்பட்ட ஆய்வு அலுவலர் சிவஞானம் என்பவர் என்னை விசாரணை செய்தார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

குறுக்கு விசாரணை (2,3,5 எதிரிகளின் சார்பாக)

நான் தனி அலுவலராக எவ்வளவு நாட்கள் பணிபுரிந்தேன் என்றால் ஸ்வீட் தயார்

செய்யும் காலத்தில் நான் தனி அலுவலராக பணி செய்யவில்லை. அதற்கு பின்னர் தான் நான் தனி அலுவலராக பணியாற்றினேன். 01.12.2006 முதல் 15.02.2008 வரை தனி அலுவலராக கூடுதல் பொறுப்பில் இருந்தேன். இனிப்பு தயார் செய்ததற்கு உண்டான ரெக்காடுகளை நான் ஆய்வு செய்தேனா என்றால் குறிப்பு தாள்களை மட்டும் தான் பார்த்தேன். அதில் தனி அலுவலர் பரிந்துரை உள்ளது. சங்கத்திற்குட்பட்ட வேலைகள் தவிர சில வேலைகளை எடுத்து செய்யலாம் என பைலாவில் உள்ளதா என்றால் உள்ளது. இனிப்புகளை தயார் செய்து சப்ளை செய்ததும் உண்மையா என்றால் இனிப்புகளை தயார் செய்து அங்காடிகளுக்கு அனுப்பி வைத்ததும் உண்மை தான். இனிப்பு தயார் செய்வதற்கான மூலப்பொருட்கள் வாங்கியதும், அதை தயார் செய்து விற்பனை செய்ய கொடுத்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இனிப்பு சம்மந்தமாக இனிப்பு கெட்டுபோன விபரங்கள் மட்டும் தான் எனக்கு தெரியும். மேற்படி இனிப்புகள் எந்த வகையில் கெட்டு போனது என்று நான் ஆராய்ந்தேனா என்றால் இனிப்புகளை தயார் செய்து உடனடியாக விற்பனை செய்யக்கூடிய அங்காடிகளுக்கு அந்த நேரத்தில் தேர்தல் வந்ததால் உடனடியாக அனுப்பி வைக்க இயலாமல் இருந்தது. கெட்டு போன பொருட்கள் விற்பனை நிலையங்களில் இருந்து திருப்பப்பட்ட போது தான் எனக்கு இந்த விபரங்கள் தெரியும் என்றால் சரிதான். இனிபுபகளை விற்பனைக்கு சரியான நேரத்தில் அனுப்பாதது யார் என்று நான் தெரிந்துக் கொண்டேனா என்றால் இல்லை. முழுமையான விபரம் தெரியாமல் பரிசீலனை செய்யாமல் எனக்கு தெரிந்த விசயங்களை மட்டும் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை (1 எதிரி சார்பாக இதனை 6ம் எதிரிக்கும் எடுத்துக் கொள்கிறார்கள்)

கெட்டு போன இனிப்புகளுக்கும் ராஜகோபால் முன்னாள் தனி அலுவலருக்கும் என்பவருக்கும் நேரடியாக தொடர்புள்ளதா என்றால் இல்லை. சங்க பணியாளர்களுக்கும் கடமை மற்றும் பொறுப்புகள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். தனி அலுவலருக்கு பொதுவான அதிகாரம் தான் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கிற்கும் தனி அலுவலர் ராஜகோபால் என்பவருக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை (7,8 எதிரிகளின் சார்பாக)

வழக்கின் சாட்சியாக சேர்க்கப்பட்டுள்ள மணிவண்ணன் என்பவர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையில் இனிப்பு பொருட்கள் தயாரித்தல் தொடர்பாக 16.07.2013 ஆம் தேதி பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்றால் தெரியாது.